

கலைஞர் 100 1924 - 2024

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 56 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – புரட்டாசி 20 – திங்கள்கிழமை 06 அக்டோபர் 2025 – வெளியூர் 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 56 : Thiruvalluvar Year - 2056 - Purataasi 20 - Monday 06 October 2025 - Dak 8 Pages ₹ 5.00


## திருச்சி – சிறுகனூரில் மிகப் பிரம்மாண்டமாக உருவாகி வரும் ‘பெரியார் உலகத்துக்கு’ – தி.மு.க.வின் 126 எம்.எல்.ஏ.க்கள், 31 எம்.பி.க்களின் ஒரு மாதச் சம்பளமான ஒன்றரைக் கோடி ரூபாயினை நன்றி உணர்வோடு வழங்குகிறோம்!

# ‘தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டோம்!’ எனச் சூளுரைப்போம்!

## மறைமலை நகரில் நடைபெற்ற ‘சுயமரியாதை இயக்க நூற்றாண்டு நிறைவு விழா’ மாநாட்டில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

**மறைமலைநகர், அக்.6-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.10.2025) செங்கல்பட்டு மாவட்டம், மறைமலைநகரில் - திராவிடர் கழகத்தின் சார்பில் நடைபெற்ற சுயமரியாதை இயக்க நூற்றாண்டு நிறைவு விழா மாநாட்டில் கலந்து கொண்டு உரை யாற்றுகையில், “திருச்சி - சிறுகனூரில் மிகப் பிரம்மாண்டமாக உருவாகி வரும் ‘பெரியார் உலகத்துக்கு’ - தி.மு.க.வின் 126 எம்.எல்.ஏ.க்கள், 31 எம்.பி.க்களின் ஒரு மாதச் சம்பளமான ஒன்றரைக் கோடி ரூபாயினை நன்றி உணர்வோடு வழங்குகிறோம்!” என்றும், “தமிழ்நாட்டை தலைகுனியவிட மாட்டோம்! எனச் சூளுரைப்போம்!” என்றும் குறிப்பிட்டார்.**

**இம்மாநாட்டில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-**

சுயமரியாதை இயக்கத்தின் நூற்றாண்டு விழா திராவிடர் கழகத்தின் மாநில மாநாடு எழுச்சியோடு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது! மானமிகு சுயமரியாதைக்காரன் என்ற உணர்வோடு பெருமை அடைகிறேன்!

இந்த விழாவில் கலந்துகொண்டு உரையாற்றக்கூடிய வாய்ப்பைப் பெற்றமைக்கு திராவிட முன்னேற்றக் கழகத் தலைவராக மட்டுமல்ல, தமிழ்நாட்டின் முதலமைச்சராக மட்டுமல்ல, மானமிகு சுயமரியாதைக்காரன் என்ற உணர்வோடு பங்கெடுப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடை கிறேன்! பெருமை அடைகிறேன்!

**திராவிடர் கழகத்தின் நீட்சிதான் தி.மு.க.!**

சுயமரியாதை இயக்கத்தின் தொடர்ச்சி திராவிடர் கழகம் என்றால் திராவிடர் கழகத்தின் நீட்சிதான் திராவிட முன்னேற்றக் கழகம்!

இன்று, தமிழ்நாட்டின் உரிமைகளை தமிழர்களின் சுயமரியாதை பகுத்தறிவு சமூகநீதிச் சிந்தனை உள்ளிட்டவற்றை நாம் பாதுகாக்கிறோம் என்றால், சுயமரியாதை இயக்கம் இந்த மண்ணில் வேர் விட்டதுதான் அதற்குக் காரணம்!

**கருப்புச் சட்டைக்காரர்கள்தான் காவலுக்குக் கெட்டிக்காரர்கள்!**

தமிழ்நாடு முழுவதிலும் இருந்து குடும்பம் குடும்பமாக வந்திருக்கும், இந்தக் கருப்புச் சட்டைக்காரர்கள்தான் தமிழ்நாட்டின் காவலுக்கு கெட்டிக்காரர்கள்!

பகுத்தறிவுச் சிந்தனையும் சுயமரியாதை உணர்வும் கொண்ட ஒரு கருப்புச் சட்டைக்காரர் ஒரு ஊரையே முன்னோக்கி இழுத்துச் செல்லும் ஆற்றல் பெற்றவர்!

திராவிடர் கழகத்தினரின் உழைப்பு, விலைமதிப்பில்லாதது! பலன் எதிர்பாராதது! அதனால்தான், பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்கள் சொன்னார்கள்... “மனமகிழ்ச்சி ஒன்றுதான் நான் அடையும் பலன்” என்று சொன்னார். அந்த மனமகிழ்ச்சியை மட்டுமே நோக்கமாகக் கொண்டு, கருத்தியல் உறுதியோடு போராட்ட வாழ்வை வாழும் திராவிடர் கழகத் தோழர்கள் அனைவருக்கும் எனது ‘சல்யூட்!’ அதிலும், 92 வயது இளைஞராக, ஓய்வின்றி, தமிழ்ச் சமுதாயத்துக்கு வழிகாட்டிக் கொண்டிருக்கும், தமிழர் தலைவர் மானமிகு அய்யா ஆசிரியர் அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்!

**திராவிட முன்னேற்றக் கழகம் செல்ல வேண்டிய பாதை - பெரியார் திடல் தான் தீர்மானிக்கிறது!**

தமிழினத்தின் மேன்மைக்காக உழைத்துக் கொண்டு வரும் அவரின் ஒப்பற்ற தியாக வாழ்வைப் போற்றும் விதமாகத்தான் நம்முடைய திராவிட மாடல் அரசில், மானமிகு அய்யா அவர்களுக்கு ‘தகைசால் தமிழர்’ விருது வழங்கியிருக்கிறோம்!

தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களும், இனமானப் பேராசிரியர் பெருந்தகை அவர்களும் நிறைவுற்ற பின்னர், என்னை வழிநடத்தும் நல்லாசிரியர் தான், நம்முடைய தகைசால் தமிழர் ஆசிரியர் அய்யா அவர்கள்! அதனால்தான், திராவிட முன்னேற்றக் கழகம் செல்ல வேண்டிய பாதையை ‘பெரியார் திடல்’ தான் தீர்மானிக்கிறது என்று நெஞ்சை நிமிர்த்திச் சொன்னேன்.

தொடர்ச்சி 3ஆம் பக்கம்



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (4.10.2025) செங்கற்பட்டு மாவட்டம், மறைமலைநகரில் நடைபெற்ற, சுயமரியாதை இயக்க நூற்றாண்டு நிறைவு விழா மாநாட்டில் கலந்து கொண்டு, மாநாட்டு நினைவுக் கல்வெட்டினைத் திறந்து வைத்துச் சிறப்புரையாற்றினார். உடன் திராவிடர் கழகத் தலைவர் – ஆசிரியர் கி.வீரமணி, கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி., அமைச்சர்கள் எ.வ. வேலு, தா.மோ. அன்பரசன், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, க.செல்வம் எம்.பி., திராவிடர் கழக துணைத் தலைவர் கலி.பூங்குன்றன், பொதுச் செயலாளர் வி.அன்புராஜ், டி.கே.எஸ். இளங்கோவன், எம்.எல்.ஏ.க்கள் நா.எழிலன், எஸ்.ஆர். ராஜா, இ.கருணாநிதி, வரலட்சுமி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### ஆழ்வார்பேட்டையில்

# மழைநீர் வடிகால் பணிகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திடீர் ஆய்வு!

**சென்னை, அக்.6–**

**சென்னையில் பல்வேறு இடங்களில் நடைபெற்று வரும் மழைநீர் வடிகால் பணிகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று காலை ஆய்வு செய்தார்.**

சென்னையில் மழைநீர் தேங்குவதைத் தடுக்கும் வகையில், சென்னை மாநகராட்சி பல்வேறு பகுதிகளில் புதிய மழைநீர் வடிகால் பணிகளை மேற்கொண்டு வருகிறது. கடந்த பருவமழையில் பாதிக்கப்பட்ட பகுதிகள், முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் மற்றும் குடியிருப்புகளில் வடிகால்களை மேம்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன. முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இந்த பணிகளை அவ்வப்போது நேரில் ஆய்வு செய்து வருகிறார்.

இந்நிலையில், சென்னை டி.டி.கே சாலை வீனஸ் காலனியில், 2 புள்ளி 16 கிலோமீட்டர் நீளத்தில் அமைக்கப்பட்டுவரும் மழை நீர் வடிகால்வாய் பணிகள் மற்றும் சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில் ஒன்றரை கிலோ மீட்டர் நீளத்தில் அமைக்கப்பட்டுள்ள கழிவுநீர் குழாய்கள் விரிவாக்க பணிகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆய்வு செய்தார். பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் பணிகளை துரிதப்படுத்த வேண்டும் என அதிகாரிகளை முதலமைச்சர் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது, அமைச்சர் மா.சுப்பிரமணியன், சட்டமன்ற உறுப்பினர் எழிலன், மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் சிற்றரசு, மாநகராட்சி ஆணையர் குமரகுருபரன், சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டி.ஜி.வினய் உள்ளிட்டவர்கள் உடனிருந்தனர்.

# அருட்பிரகாச வள்ளலார் பிறந்த நாள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

சென்னை, அக்.6–

அருட்பிரகாச வள்ளலார் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-



**“வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்” என, பசியற்ற மனிதர்களைக் காணும் கருணை நிரம்பிய அருட்பிரகாச வள்ளலார் அவர்களின் பிறந்த நாளான இந்த தனிப்பெருங்கருணை நாளில், அவர் கூறிய “மதமான பேய் பிடியாதிருக்க வேண்டும்” என்ற உயர்ந்த நிலை அனைத்து உள்ளங்களிலும் நிலை நிற்கட்டும்!**

இவ்வாறு முதல்வர் சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.